# தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை –25

## மேற்சான்றிதழ்க் கல்வி – நிலை 1 (HG10)

## ஜனவரி–பிப்ரவரி 2025

**நேரம் : 2.30 மணி நேரம்** **மதிப்பெண் : 75**

**பிரிவு – 1**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
*Answer all questions in a word / line.* **(10x1 = 10)**

1. வள்ளலார் ஏற்படுத்திய அமைப்பு யாது?
2. தமிழ் வாழ்த்து இடம்பெற்ற நூல் யாது?
3. உலக மக்கள் எப்படி வாழ வேண்டும் என்று நாமக்கல் கவிஞர் கூறுகிறார்?
4. நட்பு எப்பொழுது சிறப்பு இழந்து விடும்?
5. கல்வி எதை அழகு படுத்தும்?
6. மரபுக் கவிதையின் வகைகள் யாவை?
7. பெயர்ச்சொல் முன் வினைச்சொல் சேர்வதற்கான எடுத்துக்காட்டுத் தருக.
8. வினைச்சொல்லின் வகைகள் யாவை?
9. முன்னிலை இடம் என்பது என்ன?
10. பதினாறுகால் மண்டபத்தில் என்ன நடைபெற்றது?

**பிரிவு – 2**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
*Answer any ten questions in three lines each.* **(10x2=20)**

1. நோபல் பரிசு எத்தனை ஆண்டிற்கு ஒருமுறை வழங்கப்படுகிறது? நோபல் பரிசில் எவை எல்லாம் இடம் பெறும்?
2. காஞ்சிபுரத்தில் உள்ள பகுதிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன? அதன் சிறப்புகள் இரண்டு கூறுக.
3. நஞ்சு தேர்வில் எழுதிய உணவுப் பொருள்கள் எவை? அவன் தேர்வை முழுமையாக எழுதினானா?
4. உலகில் உள்ள செம்மொழிகள் யாவை? அவற்றில் தமிழ் எத்தனை ஆண்டு பழமை உடையது?
5. '**நம்பிக்கை**' என்னும் கவிதையில் செயபாலன் வடித்தது யாது? அஃது எதை மையமாகக் கொண்டது?
6. பாரதியாரின் முப்பெரும் பாடல்கள் யாவை? அவை எத்தன்மை கொண்டவை?
7. அந்தாதி என்றால் என்ன? அபிராமி அந்தாதி எத்தனைப் பாடல்களைக் கொண்டது?

8. முத்தொள்ளாயிரம் எழுதிய ஆசிரியர் யார்? அவை யாருடைய பெருமையைக் கூறுகிறது?
9. சீறாப்புராணத்தை எழுதியவர் யார்? அவை யாருடைய வரலாற்றைக் கூறுகிறது?
10. நாமக்கல் கவிஞர் எங்கே பிறந்தார்? அவர் பெற்றோர் யாவர்?
11. வினைச்சொல் எவற்றைக் காட்டும்? அவற்றின் சிறந்த அடையாளம் யாது?
12. பண்பாகு பெயரை விளக்குக.
13. இடம் எத்தனை வகைப்படும்? அவை யாவை? வரையறு.
14. எழுத்துகளின் ஒலி அளவு எத்தனை? அவை யாவை? எடுத்துக்காட்டுத்தருக.
15. மெய் எழுத்துகளின் வகைகள் யாவை? அவற்றை எழுதுக.

**பிரிவு – 3**

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

*Answer any five questions in six sentences each.* **(5x4=20)**

1. வடலூர் வள்ளலார் பற்றி குறிப்பு வரைக.
2. மொழி வாழ்த்து பாடலில் கவிஞர் முடியரசனாரின் கருத்து யாது?
3. நாமக்கல் கவிஞர் எவற்றையெல்லாம் வாழ்த்துகிறார்?
4. 'தமிழ் உயர்தனிச் செம்மொழி' என்பதின் மையக்கருத்தை எழுதுக.
5. வரதராசப் பெருமாள் கோயிலின் சிறப்பக்கூறுக.
6. முதல் எழுத்துகளின் வகைகளை எழுதுக.
7. திணை என்றால் என்ன? எதனை வகைப்படும்? அவை யாவை? எடுத்துக்காட்டுத்தருக.
8. பெயர்ச்சொல்லின் வகைகள் யாவை?

**பிரிவு – 4**

**IV. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**

*Answer any one of the following questions in fifteen sentences.* **(1x10=10)**

1. நட்பைக் குறித்து வள்ளுவன் கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.
2. ஆகுபெயர் என்றால் என்ன? அவற்றின் வகைகளை எழுதி ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டு தருக.
3. வீரமாமுனிவரின் குறிப்பு எழுதி, அவர் எழுதிய இயேசு பெருமான் பற்றி விளக்குக.

**பிரிவு – 5**

**V. ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**

*Write an essay in three pages to any one of the questions.* **(1x15=15)**

1. வாழை மரம் குறித்து கட்டுரை வரைக.
2. உறவினர் பற்றி பழமொழி கூறும் கருத்தை தொகுத்து எழுதுக.

******